Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 176/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 7 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | ஓட்டுநர் |
| பெயர். | - | டேவிட் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | வீரபத்திரன் | சமயம் | - | |
| கிராமம் | - | ஆமூர் | வயது | - | 36 |

19.11.2025

1 வது எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. 2 முதல் 4 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது ஆமூரில் வசித்து டாடா ஏசி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தம்பி. அ.சா.6 எனது தந்தை. எதிரிகளை தெரியாது. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 05.30 மணியளவில்நான் வீட்டிற்கு சென்ற போது அ.சா.1 ற்கு காயம் ஏற்பட்டிருந்தது. காயமடைந்த அ,சா1-ஐ திருவெண்ணெய்நல்லூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். பின்பு அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அ.சா.1-ஐ யார் அடித்தார்கள்என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 19.12.2015 ம் தேதி மாலை 04.00 மணியளவில் அ.சா.1 உடன் ரோட்டில் நடந்து வந்த போது எதிரிகள் அவரை வழிமறித்து அசிங்கமாக பேசினார்கள்என்றாலும், அப்போது எதிரிகள் கையில்வைத்திருந்த மரக்கட்டையால் அ.சா.1 ன் தலையில் அடித்தார்கள் என்றாலும்,எதிரி சத்தியராஜ் தடியால் அ.சா.1 ன் இடது கை, வலது கை மற்றும் முதுகு ஆகிய

இடங்களில் அடித்தார்கள் என்றாலும், எதிரி வீரன் குச்சியால் அ.சா.1 ன் காலிலும், முதுகிலும் அடித்தார்கள் என்றாலும், பின்பு எதிரிகள் அவரை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றாலும், மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தததாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -இல்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM.
T.V.Nallur.